www.tamilarangam.net

Raya

# நமது குரல்



RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE , FRANCE

தை. 1991. வெளியீடு. 27

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அட்டைப்படக்கவிதை :

## முனைப்பு

பேய்களால் சிதைக்கப்படும்
பிரேதத்தைப் போன்று
சிதைக்கப் பட்டேன்
ஆத்மாவின் உணர்ச்சிகள் எல்லாம்
இரத்தம் தீண்டிய கரங்களால்
அசுத்தப்படுத்தப்பட்டன.

என்னை
மேகத்திற்குள்ளும்
மண்ணிற்குள்ளும்
மறைக்க எண்ணிய வேளையில்
வெளிச்சம் போட்டுப் பார்த்தனர்.
அவர்களின்
குரோதம் நிறைந்த பார்வையும்
வஞ்சகம் நிறைந்த சிரிப்பும்
என்னைச் சுட்டெரித்தன.

எனது
ஆசைகள் இலட்சியங்கள்
சிதைக்கப்பட்டன.
அவர்களின் மனம்
மகிழ்ச்சி கொண்டது.
அவர்களின் பேரின்பம்
என் கண்ணீரில்தான்
இருக்கமுடியும்.

ஆனால் என் கண்களுக்கு
நான் அடிமையில்லை
அவர்களின் முன்
கண்ணீரைக் கொட்ட.

என் வேதனை கண்டு
ரசித்தனர் அவர்கள்
என்றைக்குமாய் என்தலை
குனிந்து போனதாய்க்
கனவு கண்டனர்.

ஆனால்
நான் வாழ்ந்தேன்
வாழ்நாளெல்லாம் நானாக
இருள் நிறைந்த
பயங்கரங்களின் ஊடாக
நான் வாழ்ந்தேன்
இன்னும் வாழ்கிறேன்.
□
சி. சிவரமணி

அட்டைப்படம் : நன்றி.
The Listener March 1987

நன்றி: சொல்லாத சேதிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நேர் நின்று பேசுவோம்

## இலக்கியத்துறை சார்ந்த பெண்களின் பங்கு

மேற்கு ஜேர்மனில் வெளிவரும் சஞ்சிகைகளில் பல பெண் எழுத்தாளர்களின் ஆக்கங்களை வாசித்து வருகிறோம். எமது சமுதாயத்திலுள்ள, தீர்வு காணவேண்டிய, பல்முனைப்பட்டு நிற்கின்ற பெண்களின் பிரச்சனைகளை வெளிப்படுத்துவதும், தீர்வுக்கான பிரயோசனமான வழிமுறைகளைக் கண்டறிவதும் இவர்கள் முன்னுள்ள பாரிய கடமைகளாகும்.

எமது புராணங்களும், இதிகாசங்களும், பெண்களை கொடுமைக்காளாக்கப்பட்டாலும் சாந்தத்துடன் இருக்கவேண்டும் என்பதையும், நற்பண்புகளோ, நல்லகுணங்களோ இல்லாத ஒருவனேயானாலும் கணவனைத் தெய்வமாகப் போற்றி வணங்க வேண்டும் என்பதையுமே போதித்து வந்துள்ளன.. இன்றுவரை இப்படியான கதைகள் எம்மை விட்டு அகலவில்லை. இப்படிப்பட்ட அர்த்தமற்ற பண்பாட்டுக்களைக் களைக்கண்டிக்கும்வேளையில், எந்த ஒரு கருத்தையும் தர்க்கரீதியாக அலசி ஆராயவேண்டும்..

சமகாலத்துக்கேற்ற, முற்போக்கான கருத்துக்களை முன்வைப்பவர்கள் ஆண்களும் புத்திஜீவிகள் வரிசையில் வைத்து எண்ணப்படுவாராயினும், பெண்களைப்பற்றிய அவர்களின் கருத்து சிலவேளைகளில் வரட்சி நிறைந்ததாக காணப்படுகின்றது:



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமது நாட்டுச் சூழலில் பெண்கள் அன்றாட வாழ்வு நடத்துவதற்கே கடும் போராட்டம் நடத்த வேண்டிய சூழ்நிலையில் உள்ளார்கள். ஆனால் சஞ்சிகைகள், விளம்பரங்கள் என்பன பெண்களின் ஒப்பனையே அலங்கரிப்பதும், கவர்ச்சி நிறைந்த கலைவடிவங்களாக எண்ணுவதுமே என்று சித்தரிக்கின்றன.

இன்னிலையில் இலக்கியத்துறையில் ஈடுபட்டுள்ள பெண்கள் தமது பங்களிப்பு என்ன என்பதைப் புரிந்து கொண்டு அதனைச் சிறப்புறச் செய்ய முன்வர வேண்டும்.

பல சகோதரிகள் பெண்களின் நிலையை அறிவுபூர்வமாக மட்டுமல்ல, அனுபவபூர்வமாகவும் கதை, கவிதை கட்டுரைகளில் வெளிப்படுத்தி வருகிறார்கள்.

தொடர்ந்து வெளிவரும் ஆக்கங்களும் சகோதரியருக்கு நம்பிக்கை ஊட்டுவதாய் அமைவதுடன், பெண்கள் பிரச்சனைகளை முனைப்பாய்க்காட்ட வேண்டும். அத்துடன் பெண்களும் மனிதப்பிறவிகளே என்பதை உணர்த்தவும் வேண்டும்.

கண்மூடித்தனமான, கட்டுக்கடங்காத விடுதலை பேசாது சமூக பொருளாதார, விடுதலையோடு எவ்வாறு பெண்விடுதலையும் இணைந்து செல்ல வேண்டும் என்பதைத் தெளிவு படுத்த வேண்டும். இதன்மூலம் புதியதொரு சமூகத்தைப் படைப்பதில் இவர்களின் பங்கு காத்திரமானதாய் அமையும்.

0000000000000000000000

இலங்கை அரசு புது ஆயுதங்களை சீனா, மற்றும் மேற்கத்திய வியாபாரிகளிடமிருந்து பெறவுள்ளது. அவற்றில் பீரங்கிப்படகுகள், ஹெலிகொப்டர்கள், போர் விமானங்கள் என்பன அடங்கும். இலங்கை அரசுக்கு பெருந்தொகையான ஆயுதங்களை அனுப்பியுள்ளது சீனாவாகும்.

ஐலன்ட். 13.11.90.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'கெத்லீன் கோஹ்' (KATHLEEN GOUGH)

# என்றொரு போர்க்குரல்!

தமிழர் சமூகவியல் பற்றிய ஆய்வுகள் வறண்ட பாலைவெளியில் கெத்லீன் கோஃபின் வரவு ஒரு ஜீவிதம் நீரூற்று. அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் கனடாவிலும் மானிடவியல்துறையில் ஆய்வும் போராட்டமுமாக நாற்பது வருடகாலம் உழைத்த இப்பெண்மணி தனது 65 வயதில் இறக்க நேர்ந்தது (08.09.90) அறிவியல் ஆய்வுத் துறையில் ஒரு பெரிய வெற்றிடத்தை விட்டுச் சென்றிருக்கிறது.

தஞ்சை மண்ணில் அரிஜனங்கள் மத்தியில் அவர்களது சமூக உறவுகளுக்கும் அவர்களது அரசியல் மயமாக்கம் பற்றியும் 1951- 53ற்குமிடையில் நடாத்திய தன ஆய்வின் சமூகவியல் முடிவுகள் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

கனடாவில் பிறந்து இங்கிலாந்தின் கேம்பிறிச் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதி பட்டப்படிப்பை முடித்த இவர் தமிழகத்துக் கிராமங்களில் மட்டும் 5 ஆண்டுகள் தன ஆய்வினை மேற்கொண்டிருந்தவர்.

இந்தியாவின் சமூக நிறுவனங்கள், சமூக உறவுமுறைகள் குறித்து இவர் விரிவாக எழுதியிருக்கின்றார். 10க்கு மேற்பட்ட பல்கலைக்கழகங்களோடு ஆய்வியலாளராகவும் பேராசிரியராகவும் இவர் தொடர்பு பட்டிருந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழகத்து அரிஜன விவசாயிகள் பழமையை விடாப்பிடியாக பற்றிக்கொண்
டிருப்பவர்கள் என்றும் மாற்றங்களை எளிதில் ஏற்றுக்கொள்ளாதவர்கள்
என்றும் காலங்காலமாக கருதப்பட்டுவந்த கருதுகோள்களை கெத்லீன்
கோஃப் இன் ஆய்வுகள் நிராகரிக்கின்றன. " இது உண்மையே இல்லை,
தாழ்த்தப்பட்ட மக்களைப்பற்றிய சரியான மதிப்பீடாக ஒருபோதுமே
அமையாது. உயர் ஜாதி இந்துக்களைவிட தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்
நிலைகள் அதிகமாகவே நெகிழ்ந்து கொடுக்கக்கூடியன. இந்த மாற்றங்க
ளால் இவர்கள் புதிதாக எதையும் இழந்துவிடப்போவதில்லை. குறிப்பாக
சுதந்திரத்துக்குப் பின்னால் தமிழகம் முழுவதும் இவர்கள் கல்விவாய்ப்புகள்
பொருளாதார முன்னேற்றம் சிவில் சமூக சமத்துவம் ஆகியவற்றில் இவர்க
ளிடம் காணப்படும் விழிப்புணர்வு வியப்பைத் தருகிறது..." என்கிறார்
கெத்லீன் கோஃப் (தஞ்சாவூரில் ஹரிஜன மக்கள் - ஏகாதிபத்தியமும் தென்
ஆசியாவில் புரட்சியும் எனும் ஆங்கில நூலில்).
தஞ்சை மண்ணில் பறைச்சேரியிலிருந்து வியட்நாம் சைகோன் நகர்வரை இப்
பெண்மணியின் பார்வை விரிந்து விரிந்தது.
மூன்றாம் உலக நாடுகளின் சமூக அமைப்பையும் மக்களையும் வெறும் ஆய்வுக்
குரிய பொருட்களாக மட்டுமே நோக்காது உண்மையான சமூகநீதியில்
தோய்ந்து அவர்களுக்காக அர்ப்பணித்துப் போராடிய நெஞ்சம் இவருடை
யது.
வியட்நாம் மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் தொடுத்த ஆக்கிரமிப்பு யுத்தத்தி
ற்கு எதிராகக் குரல் கொடுத்த இவர் பின்னாளில் வியட்நாம் மண்ணையும் மக்
களையும் உணர்வு பூர்வமாக நேசித்தார்.
வியட்நாம் மண்ணின் மீதான இந்த நேசம் " பத்தாம் நாளும் பொலியும்
அழகு - வியட்நாம் மீண்டும் எழுகிறது "(1978) என்ற அழகிய நூலாக
உருப்பெற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தென்கிழக்கிந்தியாவின் கிராமிய சமூகம் (1981)
தென்கிழக்கிந்தியாவில் கிராமிய மாற்றங்கள் (1989)
வியட்நாமின் அரசியல் பொருளாதாரம் (1990)
ஆகிய நூல்கள் இவரது அறிவு வீச்சிற்கு என்றும் சான்று சொல்லும். உலகப் பிரசித்திபெற்ற இந்த மானிடவியலாளர் பல்கலைக்கழக எல்லைக்குள் ஒரு அறிவுஜீவியாகவே புகழோடு நிலைபெற்றிருக்கமுடியும். ஆனால் மனித நேயமும் புரட்சிகர உணர்வும் கொண்ட ஒப்பற்ற பெண்நிலைவாதி எங்கெங்கெல்லாம் ஒடுக்குமுறைகள் கூர்மை கொண்டனவோ அங்கெங்கெல்லாம் அவற்றிற்கெதிரான முனையில் தன்னை ஊன்றிக்கொண்டிருக்கிறார்.

கியூபன் ஏவுகணை நெருக்கடியின்போது அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக் கொள்கையை பூரணமாக எதிர்த்தமைக்காக இவர் மசாசூசெற்ஸ் நகரின் பிரண்டீஸ் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற வேண்டியதாயிற்று. பெண் ஒடுக்குமுறைக்கு எதிராகவும் சிறுபான்மை இன மக்களின் தார்மீக உரிமைகளுக்காகவும் மூன்றாம் உலக அரங்கில் பிரசன்னமாயிருக்கிறார். மனித உரிமைகள் இயக்கத்திற்காகவும், அணு ஆயுதக் களைப்பிற்காகவும், வியட்நாமின் மீது அமெரிக்க தொடுத்த யுத்தத்தை முற்றுக்குக் கொண்டுவருவதற்காகவும் இப்பெண்மணி நடாத்திய பகிஷ்கரிப்புகள், மறியல்கள், பேச்சுகள் இவரைத் தனித்துவமான போராளியாக இனங்காட்டுகின்றது.

'கெத்லீன் கோவ்' இன்றிருந்தால் இலங்கையில் இவற்றை மேற்கொண்டிருப்பாராயின் துணிச்சலுடன் நேர்மையான உழைப்பை மேற்கொண்டதற்காகவே 35 வயதில் நடுத்தெருவில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட 2 பிள்ளைகளின் தாயான கலாநிதி ராஜனி திரணகமவைப் போலவே துப்பாக்கிக் குண்டுகளால் அளவிடப்பட்டிருப்பாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

. . . . .



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உன்னிடத்தில் தோழி...



சிறை...
வைக்கப்பட்டிருந்தால்தானே
உன்னை மீட்பதற்கு.
உனது விடுதலை...
சுதந்திரம் ஒன்றும்,
மற்றவர் கையில்... இல்லையே.

உனக்கானவற்றைத்தர...
யோசித்து நிற்பதும்...
யாரிடம் யாசித்து நிற்பதும்...
உன் வாழ்வியல்
போராட்டங்களில் அவர்கள்
பங்கேற்றவர்களா ?

விலங்கு...
இதை இட்டது யார் ?
ஒருவேளை...
நீயாகவும் இருக்கலாம்.

சமுதாயம்...
பயம்...
இவற்றை
கண்ணுக்குள்ளே வைத்து,
உன்னையே நீ...
ஏமாற்றிக்கொண்டிருக்கிறாய்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனதுக்குள்...

உனக்கானவை எதுவென ?

உன்னோடு வாழ்ந்தவருக்காக,

அர்ப்பணித்து விட்டேன் என நினைத்து

போலியாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

உனக்கான

அவற்றை மறந்திட்டு...

இஷ்டப்பட்டதை...

ஏற்றுக்கொள்.

தடுக்கவோ, பறிக்கவோ

இங்கே யாருக்கு உரிமை ?

விடுதலை...

அந்நியப்படுத்தி

இனம் காட்டும்

அடையாளங்களைத் தூக்கியெறி...

நீ

கல்லூரியிலும்,

குசினியிலும்,

குழந்தைப் பறிவும்

போராடிமுடித்தவள்

இது ஒரு போராட்டமா ?

உன்னிடத்தில்

விழிப்பு எப்போ...?

அதற்கான பாதையில்

ஆயிரம் தோழிகள்

வரலாம்.

இங்கே எல்லாமே

உன்னிடத்தில்தான்.

ஆக்கம். கோசல்யா சொர்ணலிங்கம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பெண்கள் சந்திப்பு.

மேற்கு ஜேர்மனில் வசிக்கும் பெண்கள் ஒன்றுகச் சந்தித்து கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுமுகமாக ஆரம்பிக்கப் பட்ட பெண்கள் சந்திப்பின் நான்காவது தொடர் 12.01.91 அன்று ஸ்ருட்காட் நகரில் நடைபெற்றது.

வழமைபோல் சுய அறிமுகத்தினையடுத்து நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

பெண்ணிலைவாதம் என்றால் என்ன? என்ற தலைப்பில் கட்டுரையொன்று வாசிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது. பெண்ணிலைவாதம் என்றால் என்ன? பெண்ணிலைவாதிகள் என்றால் யார்? இவர்கள் ஆண்களுக்கு எதிரானவர்களா? ஆண்களை எதிர்ப்பதுதான் இவர்களது நோக்கமா? என்ற கேள்விகளுடன் ஆரம்பித்த கட்டுரை காலங்காலமாக, சில சமூகங்களில் பெண்கள் ஒடுக்கப்படுவதையும், தாய்வழி சமூகத்தில் பெண்களிடமிருந்த தலைமைத்துவம் ஆணிடம் கைமாறப்பட்டதையும், வீட்டிலிருக்கும் பெண்கள் ஒருவித ஒடுக்குமுறைக்கும், வெளியில் சென்று வேலை பார்க்கும் பெண் இன்னொரு விதமான ஒடுக்குமுறைக்கும் உட்படுகிறார்கள், இத்தகைய ஒடுக்குமுறைகளையும், அதற்கான காரணங்களையும் இனங்கண்டு உணர்வுபூர்வமாக இதிலிருந்து விடுபட மேற்கொள்ளும் அத்தனை அத்தனை எதிர்ப்புகளும் பெண்ணிலைவாதம் என்ற பதத்தினுள் அடங்குகின்றன என விளக்கியது.

www.tamilarangam.net

இதனையடுத்து "ஆசியப்பெண்கள் விற்பனை" என்ற தலைப்பில் கலந்துரையாடல் இடம் பெற்றது. ஆசியாவிலுள்ள பெண்கள் எவ்வாறு திருமண ஏஜென்சிகளால் ஏமாற்றப்பட்டு விற்பனை செய்யப்படுகிறார்கள், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் என்பன பற்றிய தகவல்கள் பரிமாறப்பட்டன. இச்சந்தர்ப்பத்தில் இலங்கையிலிருந்து மத்திய கிழக்குக்கு பணிப்பெண்களாக செல்பவர்களின் நிலைபற்றியும் குறிப்பிடப்பட்டது. குடும்பங்களின் வறுமைச் சூழ்நிலைகளால், குழந்தைகளை, கணவனை, உறவினரைப்பிரிந்து வேலை தேடிச்செல்லும் பெண்கள், நடத்தை கெட்டவர்களாக பார்க்கப்படுவதையும், எவ்வாறு அவர்களது உழைப்பு உறிஞ்சப் படுகிறது என்பதையும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. ஆட்லர் நிறுவனம் சம்பளமற்ற கூலி அடிமைகளாக ஆசியப்பெண்களைப் பயன்படு படுத்துவதையும் ஒரு பெண் குறிப்பிட்டார்.

மதிய போசனத்தின் பின்

சினிமா, மற்றும் கலை, கலாச்சார அம்சங்கள் பெண்களை இரண்டாந்தரப்பிரஜைகளாகச் சித்தரிக்கும் சந்தர்ப்பங்களும், அவற்றை நிராகரிப்பதற்கு நாம் எடுக்கும் நடவடிக்கைகளும்" என்ற தலைப்பின் கீழ் கலந்துரையாடல் இடம் பெற்றது. கிட்டத்தட்ட வருகைதந்திருந்த எல்லாப்பெண்களும் இந்நிகழ்ச்சியில் தத்தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். மேற்கு ஜேர்மன் தொலைக்காட்சியில் பிரிவொன்றில் பெண்களை இழிவுபடுத்தும் வகையில் அமைந்த நிகழ்ச்சியொன்று ஒளிபரப்பப்படுவதற்காக பெண்கள் அமைப்புகள் கண்டனம் தெரிவித்தமை குறிப்பிடப்பட்டது. எதிர்கால ஆலோசனைகளையடுத்து, அடுத்தசந்திப்பை நொய்ஸ் நகரில் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது..

oooooooooo



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போலி எழுதுகோல்கள்

பாமினி

சமூகமாற்றம் புதுமை
புரட்சிபற்றி- அனல்
கக்கும் கவிதைகள்.
சமூக நோய்களில்
அக்கறை அதிகரித்து
அவற்றை வெளிக்கொணரும்
வித்தியாசமான கதைகள்.

உழைக்கும் மக்களுக்கும்
அடிமைப்பட்ட இனத்துக்கும்
ஆதரவான கவிதை வார்ப்புகள்
கதைக் குவியல்கள்.

ஊருக்கோர் கொள்கை.
தனக்கோர்தனிக் கொள்கை
சீர்திருத்தம் பற்றி
சீறிஎழுதுவதில்- மட்டுமே
சிரத்தையுள்ள
சிந்தனையாளர்கள்.

"உயிர்பறிக்கும் உரிமை"
இரும்புத்துண்டுக்கு- மட்டுமல்ல.
பல எழுதுகோல்களுக்குமே.
உயிர் பறிப்பு,
உணர்வுச் சிதைப்பு,
உயிரற்ற உடலுக்கும்.
உணர்வுகள் மிதிக்கப்பட்ட
மனிதனுக்கும் வேறுபாடு என்ன?
முன்னையது புறக்கொலை
பின்னையது அகக்கொலை.
மொத்தத்தில் கொல்லப்படுவது
மனிதர்களே.

உணர்வுக் கொலைகளை
செய்துவிட்டு ஊர்
கொலைகளுக்காய்
கூட்டாக ஒப்பாரி.

இன்னுமா புரியவில்லை?
இவர்களுக்குத் தேவை
சீர்திருத்த போர்வை.

உணர்வுகளை மிதிக்கும்- இந்த
உயிர் வதையை எந்த பட்டியலில்
சேர்ப்பது?

போதும் உங்கள் பொய்மைக்
கோலங்கள்.

www.tamilarangam.net

# பெண் - உடைமைப் பொருள்

மாமியார் கெரசினை ஊற்ற, மைத்துனி சேலையில் நெருப்பைப்பற்ற வைக்கும்போது 24 வயதான தவீந்தர் கௌர் டி.வி. பார்த்துக்கொண்டிருந்தாள். டெல்லி போலிசாரிடம் இதை விபரித்தபின் அவள் எரிகாயங்களினால் இறந்தாள். தவீந்தரின் கணவனும் அவன் குடும்பத்தவரும் அதிக தொகையை சீதனமாகக் கேட்டிருந்தனர். கணவன் நடத்தி வந்த மோட்டார் உதிரிப்பாகக் கடையை விஸ்தரிப்பதற்காக கேட்டிருந்த இப்பணம் கிடைக்காததால் அவள் கொலை செய்யப்பட்டாள்.

புதுடெல்லியில் மட்டும் வருடந்தோறும் 700 சீதனக்கொலைகள் பதிவு செய்யப்படுகின்றன. வெளிச்சத்துக்கு வராமல் மறைக்கப்படுபவை இன்னும் அதிகம். 1961 இலிருந்து வரதட்சணை வாங்குவது தடைசெய்யப்பட்ட போதிலும் அது கட்டாயமாக நடைமுறைப் படுத்தப்படவில்லை.

பெண்ணைப் பெற்றவர்கள் வாழ்நாள் முழுவதும் பிள்ளையைப் பெற்றவர்களின் குடும்பத்தவரின் வேண்டுகோளை நிறைவேற்றும் வகையில் அபராதம் செலுத்திக்கொண்டே இருக்கவேண்டியுள்ளது. திருமணத்தின் பின்னரும் கேட்பவைகள் கொடுக்கப்படாத பட்சத்தில் கெரசினை ஊற்றிக் கொலைசெய்வது போன்ற பயமுறுத்தல்கள் நிகழ்கின்றன. சமைக்கும்போது நெருப்புப் பற்றியது என்ற விளக்கம் அதிகாரிகளைத் திருப்திப்படுத்தப் போதுமானது.

குடும்பத்தில் பெண் குழந்தைகளுக்குக் கடைசி இடம் என்பது ஆச்சரியமானதல்ல. முதல் பெண் குழந்தை பிறந்தால் அது ஒரு இழவு வீடு நடப்பதற்கு சமன் என்று ஒரு தாய் தனது முதல் குழந்தைப்பேற்றைப் பற்றிக் குறிப்பிடுகையில் கூறினர். பெண் குழந்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிறந்தால் மட்டுமே மகிழ்ச்சி ஆரவாரமாம்.

நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்பு, பழைய சம்பிரதாயங்களுடன் தொடர்புபடுத்தி புதிய சனத்தொகைக் கட்டுப்பாட்டுக்கு வழிகோலியுள்ளது.

தாயின் கருப்பையிலிருக்கும் கருவைச் சோதிக்கும் முறை அங்கவீனக் குறைபாடுகளேதுமுள்ளதா எனக் கண்டுபிடிக்கவே. அதன் பக்கவிளைவாக, கருவிலிருக்கும் குழந்தை ஆணா பெண்ணா என்பதைக் கண்டுபிடிக்கலாம். அது பெண்குழந்தையானால் அதனை அழித்துவிடும்படி கணவன்மாரால் கர்ப்பிணிப் பெண்கள் வற்புறுத்தப்படுகிறார்கள். இப்பரிசோதனை முறை 1982 தொடக்கம் அரச மருத்துவமனைகளில் தடைசெய்யப்பட்டுள்ளது. தனியார் மருத்துவமனைகள் தற்போது இதனை மேற்கொள்கின்றன.

1978-1983க்கிடையில் இம்முறைமூலம் 78000 பெண் குழந்தைகள் கருவிலேயே அழிக்கப்பட்டன. சோதனைக்கான கட்டணம் ஏழைக் குடும்பங்களைக்கூடக் கவலைப்படவைக்கவில்லை. பின்னால் ஆயிரக்கணக்கில் கொடுப்பதையும் பார்க்க, இப்போது 500 ரூபா கொடுப்பது பரவாயில்லை, என்கிறார் ஓர் இளம் தாய். தொடர்ந்து பெண்குழந்தைகளைப் பெறுவதால் ஏழு வருட காலமாக நான் எதையெல்லாம் கேட்கவேண்டியிருக்கிறது தெரியுமா? 9 மாதம் நான் சுமக்கிறேன். குடும்பத்தவர் கடவுளிடம் வேண்டுகிறார்கள். பூசாரி வருகிறார். ஆனால் பிறகு ஒன்றும் இல்லை. 2ம், 3ம் பிரசவத்தின்போது கடைக்குட்டி மைத்துனனையே அனுப்புவார்கள் அந்த துக்கச்செய்தி கேட்க. என் கணவன், குடும்பத்தவர் சிறிதளவும் என்மீது அக்கறைகாட்ட ஒரு ஆண்குழந்தை பிறந்தால் நல்லது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பிறப்பின் பின் பெண்குழந்தைகள் கொல்லப்படுவதும் நடைபெறுகிறது. பெண்குழந்தைகளுக்கு போஷாக்கு இல்லாமையும் மருத்துவக் கவனம் குறைவாகவே கொடுக்கப்படுவதையும் சாதலைகள் காட்டுகின்றன. சிசுப்பிராயத்தில் பெண்குழந்தைகளின் இறப்புவீதம் ஆண்குழந்தைகளிலும் அதிகமாகவே உள்ளது. 15வயதில் போஷாக்குக் குறைவு பெண்குழந்தைகளில் 71 வீதமாகவும் ஆண்குழந்தைகளில் 28 வீதமாகவும் உள்ளது. 1, அல்லது ஒன்றரை வருடகாலம் குறைவாகவே பெண்களின் வாழ்வுக்காலம் உள்ளது.

ஆண்பிள்ளைகளுக்கு முதலிடம் கொடுக்கக் காரணம் உள்ளது. பெண்பிள்ளைகளால் லாபமில்லை. திருமணத்தின் பின் பிறந்த வீட்டைவிட்டு சென்று கணவன் வீட்டில் வாழவேண்டியவர்கள், திருமணம் என்பது கன்னிகாதானம் என்ற பெயரில் பெண்ணைக் கணவனிடம் (புதிய சொந்தக்காரனிடம்) ஒப்படைப்பது.

பெண் கணவனுக்கே முற்றுமுழுதான உடைமையாக்கப்படுகிறாள். மனுசாத்திரத்தில் பிள்ளைப் பருவத்தில் தந்தையிடம், இளமைப்பருவத்தில் கணவனிடம், விதவையானபின் ஆண்மக்களிடத்தில் அடங்கி வாழ வேண்டியவள் பெண் என்று கூறப்படுகிறது.

90 விகிதமான திருமணங்கள் பெற்றோராலேயே முடிவுசெய்யப்படுகின்றன. சட்டப்படி தடைசெய்யப்பட்டிருந்தபோதிலும் குழந்தைப்பருவத்திலேயே முடிச்சுப்போடும் வழக்கம் சில குடும்பங்களிலுள்ளது.

ஆண்டாண்டு காலமாகச் சொல்லி வந்ததையே இப்போதும் மணமகன் திருமணத்தின்போது சொல்லுகிறான். [illegible] உலையாக இரு, எப்போதும் ஒன்றாக இணைபிரியாமல் இருப்போம், ஆண்மக்களைப் பெறுவோமாக.

பெண்களைக் கணக்கில் எடுப்பதில்லை.

www.tamilarangam.net

இந்தியாவிலும் பெண்கள் அடக்குமுறைக்கு எதிராகப்போராடத் தொடங்கிவிட்டார்கள். தவிந்தர் தீ மூட்டிக் கொலை செய்யப்பட்டவேளை போலிஸ் அது தற்கொலை என பைலில் எழுதியபோது தலைநகரில் நீண்ட ஒரு ஆண்ட ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலம் சீதன ஒழிப்புக்காவும், வரதட்சணைக் கொலைகளுக்குத் தண்டனை வழங்கும்படியும் கோரி நடத்தப்பட்டது. 1985ல் வரதட்சணைக் கொலை செய்வோருக்கு மரணதண்டனை வழங்கும் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டது.

பஞ்சாப்பில் வழங்கிவரும் ஒரு பழமொழி:
துரதிருஷ்டமுள்ள மனிதன் குதிரையை இழக்கிறான், அதிர்ஷ்டக்காரன் மனைவியை இழக்கிறான்.

நன்றி. *mit anderen Augen sehen* 1987.
டி.கே.

இலங்கையில் 1987 தொடக்கம் 60,000 பேருக்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளனர். ஐரோப்பா பாராளுமன்றத்தில், பெல்ஜியம், நெதர்லாந்தைச் சேர்ந்த இரு சட்டத்தரணிகளால் இது வெளிப்படுத்தப்பட்டது. இக்குழு கடந்த ஒக்டோபரில் இலங்கைக்கு விஜயம் செய்து மனித உரிமை மீறல்கள் பற்றி தகவல் வெளியிட்டுள்ளது.

நன்றி. *Sud Asien*
வெளியீடு. 1.91.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெளிநாட்டவரை அச்சுறுத்தும் ஜேர்மனியின் புதிய சட்டங்கள்!

## ஜேர்மனியின் புதிய சட்டங்கள் அயல் நாடுகளுக்கும் ஒரு ஊக்குவிப்பு

க.கவிதா

"ஐரோப்பாவில் மாறிவரும் தற்போதைய சூழ்நிலைகளில் இருந்து நாம் ஜேர்மனியின் தனித்துவத்தை காப்பாற்ற வேண்டியிருக்கின்றது. எமது இறைமையைப் பாதுகாக்கவும், எமது தேசிய அடையாளத்தை நிலைநாட்டவும் வேண்டிய அவசியம் இப்போது எமக்கு ஏற்பட்டுள்ளது. இதற்காக நாம் வெளிநாட்டவரின் வருகையை எல்லா வழிகளிலும் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. இதனாலேயே வெளிநாட்டவர்களுக்கான புதிய சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்திக்கூற விரும்புகின்றேன்."

இவ்வாறு மேற்கு ஜேர்மன் அரசின் உள்நாட்டு விவகார அமைச்சர் வோல்ப்காங் ஷொய்ப்லே(Wolfgang Scheuble) தமது பாராளுமன்ற உரையின் போது தெரிவித்திருந்தார். மேற்கு ஜேர்மனியில் வதியும் வெளிநாட்டவர்களுக்கான புதிய சட்டமூலம் ஒன்றை பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு விடப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

இவர் மேற்கு ஜேர்மன் அரசின் சார்பாக பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த புதிய சட்டங்களின் முக்கிய பிரிவுகள் பின்வருமாறு:

(1) மாநிலங்கள் எதுவும் பிரத்தியேக சட்டங்கள் எதையும் இனிவரும் காலங்களில் இயற்ற முடியாது. வெளிநாட்டவர் பற்றிய அனைத்து சட்டங்களும் மத்திய அமைப்பான ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு பாராளுமன்றத்தின் மூலம் மட்டுமே இயற்ற முடியும்.

(2) வெளிநாட்டு விவகாரங்களிற்கான பொலிஸ் துறை, குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவு, அரச ஸ்தாபனங்கள், வங்கிகள் முதலான அனைத்துத்துறைகளும் தாம் வெளிநாட்டவர்களுடன் மேற்கொண்டுள்ள அனைத்து தொடர்புகளையும், தகவல்களையும் பரிமாறிக்கொள்ள வேண்டும். வெளிநாட்டு பொலிஸ் இலாகாவை மையப்படுத்தியதாக இவற்றை ஒன்று திரட்டி நேரடிக் கண்காணிப்பில் வைத்துக்கொள்ள உதவுதல் வேண்டும்.

(3). வெளிநாட்டவர்களுக்கான வதிவிட அனுமதி வழங்கலை மூன்று வகைகளாக்குதல்.

(4) பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் ஜேர்மன் அரசின் அனுமதி(Visa) கிடைக்கப்பெற்றே இனிமேல் வரமுடியும். இங்கு பிறக்கும் குழந்தைகளுக்கான ஜேர்மன் பிறப்பு அத்தாட்சி பதிவு இனிமேல் வழங்கப்படமாட்டாது. பெற்றோர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களோ அந்நாட்டின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டியவராக இருப்பர்.

(5) ஒவ்வொரு ஜேர்மனிய பிரஜையும் தேவை ஏற்படும் போது வெளிநாட்டவர்களின் நடவடிக்கைகளை கண்காணித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜேர்மன் அரச அதிகாரிகளிற்கு உதவ வேண்டும்.

மேற்படி பிரதான உள்ளடக்கங்களையுடைய இச்சட்டமூலமானது வெளிநாட்டவர்களுக்கு சார்பான அனைத்து சக்திகளாலும் வன்மையான கண்டனத்திற்கும், விமர்சனத்திற்கும் உள்ளாகியது. சமூகசேவையாளர்களும், ஜேர்மனி நலன்புரி சங்கங்களும், மனித உரிமை அமைப்புக்களும், தொழிற்சங்கங்களும், இதர சக்திகளுக்கு உதவும் ஸ்தாபனங்களும் இச்சட்டமூலத்தை வன்மையாக எதிர்த்தன. இச் சட்டமூலத்துக்கு எதிராக இடர்களாய் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும், கண்டனக்கூட்டங்களும் தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்டு வந்தன.

ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் பிரதான எதிர்க்கட்சிகளான சமூக ஜனநாயகக் கட்சியும்(SPD) பசுமைக் கட்சியும்(Die Gruene) பாராளுமன்றத்தில் விவாதம் நடந்தபோது பலத்த ஆட்சேபனைகளை தெரிவித்திருந்தன.

"ஜேர்மனிக்கு வருபவர்களுக்கு சகல விதமான சமூக, கல்வி, வாழ்க்கை வசதிகளை வழங்குவோமென உத்தரவாதமளிக்கும் ஆளும் கட்சியினர் நடைமுறையில் இதற்கு மாறாகவே நடந்து வருகின்றனர். இவ் வெளிநாட்டவர்களை பற்றி பேசுவதற்குக்கூட இக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

கடந்த வருடம் மாத்திரம் 7,50,000 மக்கள் இந்நாட்டிற்குள் வெளிநாட்டவர்கள் என்ற வகையில் வந்துள்ளார்கள். இந்த வருடம் இத்தொகை 3 முதல் 5 இலட்சம் வரை இருக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த ஆண்டுகளில் வெளிநாட்டவர்கள் மீதான சில நடைமுறைகளை இவ்வாறு கடுமையாக கடைப்பிடித்ததன் மூலம் 3% வெளிநாட்டவர்களுக்கே அரசியல் தஞ்சம் கிடைத்திருக்கின்றது. குறிப்பாக மூன்றாவது உலக நாடுகளில் இருந்து அகதிகளின் வருகை வெகுவாகக் குறைந்து போயுள்ளது.

ஜேர்மனியின் எல்லாக்கதவுகளும் ஜேர்மனியர்களுக்கும் அவர்களது பரம்பரையினருக்கும் மாத்திரமே திறக்கப்பட்டிருக்கிறது. ஜேர்மனியில் சிறுபான்மை மக்களாக வாழ்ந்து வரும் வெளிநாட்டவர்களுக்கு இவ் வாய்ப்புக்கள் மறுக்கப்படுகின்றது. ஜேர்மன் தேசியவாதமே மேலோங்கி நிற்கிறது."

இவ்வாறு பாராளுமன்ற விவாதத்தின் போது பசுமைக





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




ஜேர்மனியில் இயற்றப்பட்ட புதிய வெளிநாட்டவர் சட்டத்தைஎதிர்த்து 24.4.90 அன்று பேர்லினில் பல அமைப்புகள் ஒன்றிணைந்து நடாத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்.

கட்சியின் பிரதிநிதி பிரிகா றெஸ்ஸ்(Frike Trees) தனது உரையில் கண்டனம் தெரிவித்திருந்திருந்தார்.

பாராளுமன்ற விவாதத்தின் போது மற்றுமொரு எதிர்க்கட்சியான சமூக ஜனநாயகக் கட்சியும்(SPD) இச் சட்டமூலத்தைக் கண்டித்ததுடன் வெளிநாட்டவருக்கு வழங்க வேண்டிய உரிமைகள் பற்றியும் தெரிவித்திருந்தது.

"நாம் வெளிநாட்டவர்களுக்கு ஒரு நல்ல அயலவராகவே இருக்க விரும்புகின்றோம். ஓர் இலகுவான இரட்டைப்பிரஜாவுரிமையை அவர்களுக்கு வழங்குவதையே நாம் விரும்புகின்றோம். இவ் இரட்டைப்பிரஜாவுரிமையை வழங்குவதன் மூலம் ஜேர்மன் சமூகத்தை படுகுழியில் தள்ளுகின்றோம் என ஆளும் கட்சி நண்பர்கள் கூறுவது எனக்கு புதிராக இருக்கிறது. இங்கு வாழும் வெளிநாட்டவர்களின் சமூக பொருளாதார வாழ்க்கைத்தரத்தை உறுதிப்படுத்துவதற்குரிய சட்டமூலங்களையே இயற்ற வேண்டுமென கேட்டுக்கொள்ளுகின்றோம். இதற்காக அவர்களுக்கு இரட்டைப் பிரஜாவுரிமையும், வாக்குரிமையும் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்துகின்றோம்."

இவ்வாறு சமூக ஜனநாயக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தோமஸ் ஷ்ரோடர்(Thomas Schroeder) தமது விவாத உரையின் போது தமது கட்சியின் நிலைப்பாட்டினை தெளிவுபடுத்தினார்.

எதிர்க்கட்சிகளின் ஆட்சேபணைகளும், கண்டனங்களும் வெளிவந்தபின் இவற்றிற்கு பதிலளிக்கும் வகையில் உள்நாட்டு விவகார அமைச்சர் வோல்வ்காங் ஷொய்பிலே தனது உரையில்

"நடைமுறைக்குக் கொண்டு வரப்படவிருக்கும் இப்புதிய சட்டமூலத்தில் புதிய கோரிக்கைகள் எதற்கும் இடமளிக்க மாட்டேன் என்பதை உறுதியாக உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வெளிநாட்டவர்களுக்கான வாக்குரிமைக்கோ, பிரஜாவுரிமைக்கோ இச்சட்டத்தில் இடமிருக்காது. இவ்வுரிமைகளை வழங்குவது இச்சட்டத்தின் நோக்கங்களையே சிதறடித்துவிடும்" என்றார்.

பாராளுமன்ற விவாதங்களை தொடர்ந்து வெளிநாட்டவர்களுக்கான புதிய சட்டமூலமானது ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் பாராளுமன்றத்தில் 27.4.1990. அன்று நிறைவேற்றப்பட்டது. அது 1991 முதல் அமுலுக்குக் கொண்டுவரப்படவுள்ளது.

இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்பு ஜேர்மனியில் தஞ்சமடைந்துள்ள வெளிநாட்டவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பீதியைப் போக்கவும் தமது கட்சியின் நிலைப்பாடுகளுக்கு அமையவும் பிரதான எதிர்க்கட்சிகளான சமூக ஜனநாயக கட்சியும் பசுமைக் கட்சியும் மாற்று யோசனைகள் குறித்து ஆராய்ந்து வருகின்றன.

ஜேர்மனியில் 1960ம் ஆண்டு முதல் கட்டம் கட்டமாக வெளிநாட்டவர்கள் வருகை தந்துள்ளனர். துருக்கி, ஈரான், குர்திஸ்தான், பாலஸ்தீனம், எதியோப்பியா, ஆப்கானிஸ்தான், சிலி, பாகிஸ்தான், கானா, நைஜீரியா, வியட்நாம், இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்தே அகதிகளாக இவர்கள் வந்துள்ளனர். இவர்களின் வருகையினால் ஜேர்மனியில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு நெருக்கடிகளின் காரணமாக இது முன்னணி அரசியல் சர்ச்சையாக மாறியுள்ளது.

ஜேர்மன் தேசியவாதமானது தன்னை நிலை நிறுத்த வெளிநாட்டவர்களுக்கு எதிரான போக்கை கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளது. இதற்கு அடையாளமாகவே புதிய சட்டங்கள் நிறைவேறியுள்ளன. இச் சட்டங்களின் உள்ளடக்கமானது ஐரோப்பாவின் ஏனைய நாடுகளுக்கும் ஊக்குவிப்பாய் அமைந்துள்ளது. அவர்கள் பின்பற்றுவதற்கும் வாய்ப்புக்களை வழங்கியுள்ளது. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிந்திப்போம்....... நிந்திப்போம் ........

விடியலுக்காக தினம் நாங்கள்
வேட்டையாடும் வெட்டுக்கிளிகள் அல்ல.
குடி மூழ்கிப் போனாலும் எங்கள்
குணம் மாறிப் போவதற்கு.

ஏழ்மைக் கருவறைக்குள் எங்கள்
இளமைக் கருவிழிகள்
தாழ்மையாய்த் தவித்ததெல்லாம் ஓர்
வேள்வித் திருவிழிப்பே...

சின்னஞ் சிறுசுகளாய் நாம்
சிறகடித்துத் திரிந்த போது
கேட்டறிந்த ஞானமது... இந்தக்
கேடு கெட்ட சீதனம் ... அது.
பாடுபட்டுழைத்த பணம், வீடு
ஏடெடுத்துக் கற்ற பாடம்
இவையாவுடன் சேர்ந்த நற்குணம்
சீதனமாகிட வேண்டும் பெண்ணுக்கு...

சிந்தித்த மனதுகளில் தினம்
வந்து போனது எண்ணங்கள்
நற்குணத்துடன் நல்ல படிப்பும்
பொற்குடமாகியே சீதனமாகிடும்

எதற்காகப் மேலதிகப் பணம், வீடு?
எதற்காக சீர்வரிசை இவளுக்கு
அன்று கேட்டது கேள்வி..
இன்றும் தொடர்கிறது சீர்வரிசை.

ஆண்டவன் தந்தது ஆறறிவு..
ஆற்றலுண்டு சிந்திப்பதற்கு....
சிந்திப்போம்... நாம் சீர்தூக்குவோம்
நிந்திப்போம்... நாம்... சீதனத்தை...

ஆக்கம்:- புஸ்பா கிறிஸ்ரி. (பரந்தன் கலைப்புஸ்பா)

www.tamilarangam.net

# சர்வாதிகாரமும் கொண்ட அப்பா

இரா.ரஜீன் குமார் -

வாந்தி முதலாய்
வலியால் துடித்து
முனகி முக்கி
மலமும் கழிந்து
யோனி கிழிந்து
குருதி வழிந்து

இவ்வளவு நிகழ்வும்
நடந்து முடிந்ததும்
தாதி ஒருத்தி
சேதி சொன்னாள்:
"சுகப் பிரசவம்"
நானும் எனது பங்களிப்பாய்
இனிப்பு பெட்டியுடன் நண்பனைத்தேடி....

கேட்டான். சொன்னேன்
"சுகப்பிரசவம்"
அவனும் சொன்னான்
"எனது ஐந்து குழந்தைகளும்
சுகப்பிரசவம் தான்"
என்ன சுகம்! என்ன சுகம்!
ஆகா! அப்பன் ஆகுதல் என்ன சுகம்!

www.tamilarangam.net

# நிமிர்ந்து பார்

-இராஜன் முருகவேல்.

சேதி கேளாய்
சேவல் கூவியதால்தான்
பொழுது விடிந்ததாம்
கோழிக்கு தகுதி இல்லையாம்
மிருகங்களில் கூட
எருதுக்கும் கிடாய்க்கும்தான்
சந்தையில் விலைகூட
பிணமானால் கூட
சேவலும் கிடாயும்தான்
இறைச்சியில் ருசியாம்
இத்தனையும் மீறி
பெண்ணொருத்தி முன்வந்தால்
தெய்வமாக்கி பதவியில் வைத்து
மௌனமாக்கி விடுவோம்
நீ தலை குனிந்து நடந்த போதுதான்
எல்லாமே அரங்கேறி விட்டன
இப்போதாவது
நிமிர்ந்து பார்
காப்புகளை கழற்றிவிடு
வேண்டாம் கைவிலங்கு.

www.tamilarangam.net

# பெண் விடுதலை

விஜிதா

பெண் விடுதலை தொடர்பாகத் திட்டவட்டமான கருத்துக்கள் எதுவும் முன்வைக்கப்படாமல் இன்று விவாதங்களும் சர்ச்சைகளும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் நல்லதொரு காலச்சூழலில் நாம் வாழ்கிறோம்.

இன்று வெளியாகும் இது தொடர்பான நூல்களும் கூட விவாதத்துக்குரிய முன்னுரை, விமர்சனத்துக்குரிய கருத்து வைக்கப்படுகின்றது எனக் கூறிக்கொண்டே முன்வருகின்றன.

இந்நிலையில் இது தொடர்பாக எதையும் அறிந்துவிட்டோம் என எம்முள் நாம் இறுமாப்புக் கொள்ளமுடியாத நிலையிலுள்ளோம். இருந்தும் இந்த மாபெரும் பணியை முழுமையாகச் சுமந்தவர்களாக எண்ணமுடியாத போதும் எம்மாலியன்றதை நிச்சயம் செய்யவேண்டிய கடமைப்பாடுடையவர்கள் என்பது மறுக்கமுடியாது. "இராமாயணத்து அணில்" போலாவது எமது பணி இருந்தே ஆகவேண்டும்.

இங்குதான் நாம் மிகக் கவனமாகச் செயற்படவேண்டியுள்ளது. எமது சரியான கருத்துக்களும், சரியான பார்வையும், மிகமிக நிதானமான விளக்கமிக்க போக்கும் தரும் நன்மையைவிட இவைகளைக் கவனத்திலெடுக்காத போக்குகள் தரும் தீமையானது பன்மடங்கு அதிகமானதாகும்.

எனவேதான்.....

1, எமக்குள் நாம் நன்கு தெளிவு பெறுதலும்

2, நடைமுறையோடு இணைந்து செல்லும் சிந்தனையாளர்களின் கருத்துக்களைப் பற்றிய கலந்துரையாடல்கள் செய்வதும்.

3, முதலில் நாம் நடைமுறை உலகோடு இணைந்து கொள்வதும்.

போன்ற நடவடிக்கைகைகள் அவசியமாகின்றது. இவை தொடர்பாக முடிவான கருத்துக்கள் வைக்குமளவுக்கு நான்

www.tamilarangam.net

வளர்ச்சியுற்றவளில்லை என்பதால், எம்மிடையே விவாதங்களை ஏற்படுத்தி அதன் மூலம் நல்ல கருத்தைத் தேடி நல்ல முடிவை நோக்கிச் செல்லவல்ல சில வினாக்களை உங்கள் முன் வைப்பதன் மூலம் இச்சந்திப்பில் எனது பணியை ஆற்றுகிறேன். வினாக்கள் கூட முழுமையாக இத்துறையைத் தொட்டுவிட்டன என்பதால் தொடர்ந்து செல்வதற்கு அடிகோலுமாயின் அதுவும் வெற்றியேதான்.

வினாக்கள்:-

1, "மனிதக்குரங்கில் காணப்பட்ட மிகையான- நீடித்த தாய்மைத் தன்மை தான் முதன் முதலில் சமூகவாழ்வு தோன்றுவதற்குக் காரணமாக இருக்கலாம்" என்கிறார் "றொபேட் பிறிவோல்ட்" (1920களில்) இவருடைய ஆய்வுகள் எங்கெல்லின் உழைப்பு பற்றிய கோட்பாட்டுடன் இணைந்து சென்றது..... இத்துடன் பல்வேறு முக்கிய உற்பத்திகளும் கூட தாயிடமே இருந்ததையும் அவர் குறிப்பிடும் கருத்துக்கள் விவாதமின்றி ஏற்கக் கூடியவையா?

2, இக்கருத்துக்கு எதிரானவர்களின் கருத்துக்களும் ஆராயப்பட வேண்டியதா?

3, ராகுல சாங்கிருத்தியானினதும், எலிவின் றீட் போன்றோரின் ஆய்வு நூல்கள், எங்கெல்லின் "குடும்பம் தனிச்சொத்து", "மனிதக் குரங்கிலிருந்து மனிதனாக மாறிய இடைக்காலப் படிமுறையில் உழைப்பின் பங்கு" போன்ற நூல்களிலும், லெனின், ஜென்னி, க்ரூப்ஸ்காயா போன்றோரின் கட்டுரைகள் என்பவற்றிலிருந்து இப்பிரச்சனையை பொருள்முதல்வாத அடிப்படையில் நோக்குவதா அல்லது சென்-சிங்-மௌ, காந்தி போன்ற சீர்திருத்தவாதிகளில் கருத்தோட்டத்துடன் நோக்குவதா?

4, உற்பத்தி உறவுகளில் ஏற்பட்டமாற்றமா பெண்ணின் பலவீனமா ஆணின் பலமா, சமூகமாற்றமா ஆரம்பகட்டமா சமூகவாழ்வைக் குடும்பம் எனும் அமைப்புவடிவத்திற்கு உட்படுத்தியது?

www.tamilarangam.net

5, சமுகத்தில் தனது உற்பத்திப் பங்கை ஆற்றமுடியாதவாறு பெண் எப்போ தள்ளிவைக்கப்பட்டாள்?

6, பெண் தனது பாலியல் நடவடிக்கைகளையும், இனவிருத்திக்கான பங்குபற்றுதலையும் ஒரே ஒரு ஆணிடம் ஒப்படைத்து விடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதும் அதன் கேடயமாகக் "கற்பு" அறிமுகமாகி வலியுறுத்தப்பட்டதும் எந்த நிலையில் நிகழ்ந்தவை?

7, இந்தக் கட்டத்தில் பெண்ணடிமை நிலையிலும் ஆணாதிக்க முனைப்பிலும் பெருவளர்ச்சி காணப்பட்டதா இல்லையா இவைகளில் எந்தவித பொருளாதாரப் பங்குபற்றுதலும் இல்லையா?

8, தனிக்குடும்பத்தில் ஒரு பெண்ணின் தமது குடும்பத்திற்கான உழைப்பை யாரோ குடும்பத்திற்கு அப்பாலே இருந்து சுரண்டுவதும், அதே உழைப்பை கூடிய விலைகொடுத்து வாங்குவதற்காக பெண் மீண்டும் ஆணைவிட மேலும் சுரண்டப்படுவதும் எமது கணிப்புக்குள் கொள்ளப்படக் கூடாதா?

9, நவீனத்துவம் அல்லது நாகரீகம் என்பது மனிதன் இயற்கையின் கட்டுப்பாடுகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதாகும்.

இதன்படி விஞ்ஞான முன்னேற்றத்திலும் சமூக வளர்ச்சியிலும் குழந்தைகளை உற்பத்தி செய்யும் பொறுப்பும், பராமரிக்கும் பொறுப்பும் கூட எம்மைவிட்டு நீங்கலாம். இருந்தபோதும் இன்று பாட்டாளிவர்க்கத்தினரிடமுள்ள சமூகப்பிரஜைகளை உற்பத்தி செய்யும் சக்தியானது ஒரு வேளை முதலாளித்துவத்தை அச்சுறுத்தும் அல்லது மண்டியிட வைக்கும் சக்தி என்பதை அறிந்துள்ளோமா?

10, இதனூடே சிலவேளை பெண்களைப் பலாத்காரமாகப் பிடித்து செயற்கை முறையில் சினைப்படுத்தும் அபாயம் கூட அன்மித்த ஐரோப்பிய முதலாளித்துவ வளர்ச்சியில் ஏற்பட்டாற் கூட ஆச்சரியப்படமுடியாது. இதற்கு உதாரணமே இன்றைய 7,000,-DM ஊக்குவிப்புப்பணம். இவைகளுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிராக ஏதும் நடவடிக்கை எடுக்கவோ, இவைகளை உணரவோ எத்தனித்தோமா?

11, எனவே இன்றைய எமது பணி என்ன?

12, இன்று எமது பணிக்காக நாம் பாவிக்கும் குறியீடான "பெண்நிலைவாதம்" எனும் பதம் சரியானதா?

13, "பெண்நிலைவாதம்" என்ற பதம் எப்போ ஆரம்பமானது, யார் மத்தியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. எமக்காக யாரால் முன் மொழியப்பட்டது. இன்னும் இதை நாம் தொடர்ந்து பாவிப்பது சரியானதா? என்ற கேள்விகளுக்கு முதலில் விடை காணவேண்டும்.

14, முழு மனிதக்குலத்தையும் அனைத்து ஒடுக்குமுறைகளிலிருந்து விடுவிப்பதாகக் கூறும் மாக்ஸியம் பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு மட்டும் புறம்பானதா?

15, பொருள்முதல்வாதக் கண்ணோட்டம், உற்பத்தி உறவுகளின் மாற்றம், பாட்டாளிவர்க்கப் புரட்சியினூடான சமூகமாற்றம் என்பவற்றைக் கருத்திற் கொள்ளாத ஒரு விடுதலை எமக்கு விடுதலையை பெற்றுத் தருமா?

16, நாம் தனித்து இயங்கும் அல்லது தனியான தத்துவத்தை வைக்கும் செயற்பாடு உலகப்புரட்சியின் பாதியைப் பலம் இழக்கச் செய்யாதா?

17, தேசிய இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இராணுவத் தீர்வோ அல்லது அரசியல் தீர்வோ அவ்வப்போது வைக்கப்பட்டபோதும், அதன் முழுமையான தீர்வு சமூகமாற்றத்தின் பின்னரே நிகழும் என்ற தத்துவ உதாரணம் மற்றும் எம் மக்கள் மத்தியிற் காணப்படும் ஜாதிபேதத்திற் எதிரான ஸ்தாபனங்கள், செயற்பாடுகள், சட்டங்கள் செயற்பட்ட போதும் அதன் அடிப்படை மாற்றம் அல்லது முழுமையான அழிவு ஒரு வர்க்க பேதமற்ற சமூக அமைப்பின் வளர்ச்சியிலேயேயுள்ளது என்ற நடைமுறை உதாரணங்களைப் போல அல்லது அண்ணளவாக வேறும் இதை ஒத்த இயல்புகள் பெண்விடுதலை எனும் தேவையினைப் பாதிக்கவில்லையா?

18, மேல்மட்ட Ladies Club புகளா? அல்லது கூடிக்

www.tamilarangam.net

கதைத்து சீர்திருத்தவாதக் கருத்துக்கள் வைத்துவிட்டு சமூகக்கொடுமைகளைக் கண்டு சபித்துவிட்டுச். செல்லும் மத்திம அமைப்புகளா? அல்லது புரட்சிகரமான கருத்துக்களோடு ஆயுதப்போராட்டம், பாட்டாளிவர்க்கவிடுதலை போன்றவற்றோடு இணைந்து செல்லும் கீழ்மட்ட அமைப்புகளா? எதை நாம் பெண்விடுதலைக்கான சரியான அமைப்புகளென இனம் காணலாம்?

19. எமது பிரதான எதிரி யார்? தனி ஒவ்வொரு ஆணுமா? அல்லது ஆண்களின் அமைப்புகளா அல்லது இந்த முதலாளித்துவ சமூகமா?

20. ஆணைக் குடும்பத் தலைவனாக்கல், அவனை எதிர்பார்த்திருக்கும் பொருளாதாரத் தேவைகளை மனைவிக்கு ஏற்படுத்தல் எனும் செயற் பாட்டின் மூலம் தன்னை எதிர்க்க வேண்டிய மக்கள் தொகையின் சரி பாதியை உணரமுடியாத அளவு மறைத்து விட்டதோடு மட்டுமல்லாமல் சிநேக உறவோடிருக்கக் கூடிய மனிதஇனத்தைத் தம்முள் தாமே எதிரிகளைச் சிருஷ்டித்துக் கொள்ளும் வகையிற் திசைமாற்றி விட்டிருப்பதை நாம் அறிந்து கொண்டோமா?

21. ஆணாதிக்கம் ஒரு ஆணின் எந்தநிலையில் உருவாகிறது? இது எவ்வாறு தன் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கிறது. இதன் தலைமை எது? எமது குடும்ப அங்கத்தவர்களான ஆண்களில் யார் எம்மை மேலாதிக்கம் செய்கிறார்கள்.

22. குறிப்பிட்ட பருவத்தில் மட்டும் அல்லது பொறுப்பில் மட்டும் ஒரு ஆண் ஆணாதிக்க வெறி கொண்டவனாக இருப்பதற்கு என்ன காரணங்கள் உள்ளன? பொருளாதாரம், கலை- இலக்கியம், பண்பாடு, நாகரீகம் என்பனவும் பிறவுமான புறக்காரணிகள் எதுவும் இதில் சம்பந்தப்படவில்லையா?

23. மேற்படி காரணிகள் எந்த சமூக அமைப்பினுள்ளனவோ அவை ஆணைத் தனதாக்கி மென்மேலும் ஆணாதிக்கவெறியை வளர்த்துவிடுவதனை

www.tamilarangam.net

எதிர்க்கும், அறிந்திருக்கும், அறியாமல் மூழ்கி இருக்கும், அல்லது விரும்பி நடைமுறைப்படுத்தும் வேறுபட்ட வகையினரைக் கணிப்பது பற்றியும் இவ்வாறான நடைமுறையை அவர்களுக்கு விளங்கவைப்பது பற்றியும் கவனம் எடுத்தோமா?

24, மேற்படி விடயங்களிற் சரியான தெளிவற்றுச் செயற்படுவது உலக விடுதலைக்கு எதிர்ப்புரட்சிகரமான செயற்பாடே என்பதையாவது நாம் அறிந்துள்ளோமா?

25, இயற்கையும் இசைவாக்கங்களும், தகாத புணர்வுகள்.
பாலினக் கவர்ச்சியும்- இனவிருத்திச் செயற்பாடுகளும்.
மனித விலங்கின் பண்பாட்டுக் குணாம்சங்களும் செயற்பாடுகளும்.

அழகியல் நாட்டம், பாலியல் விருப்பும் இணைவும், பாலியல் சுரண்டல், பாலியற் பலாத்காரம், பாலுறவுக் கொலைகள் என்பன போன்ற ஒரு உயிரின் இன உற்பத்தி தொடர்பான நடவடிக்கைகள் செயல்கள் பற்றி முழுமையும் புறத்தே தள்ளிவிட்டு இது பற்றிய ஆய்வுகள் விளக்கங்களற்று குடும்ப அமைப்புக்குள்ளோ அல்லது குழு அமைப்புக்குள்ளோ வாழும் மனிதவிலங்கு பற்றி ஆராயமுடியுமா?

எனவே இவை பற்றியும் இன்னும் பல கேள்விகளூடாகவும் ஆய்வுகளையும் அநுமானங்களையும் வைப்பதால் மட்டுமே நாம் முன் செல்லமுடியும் என்பதை நம்புகிறேன்.

இதேவேளை நமது குறைபாடுகள் பற்றியும் நாம் நிச்சயம் கவனத்திலெடுக்கவேண்டும்.

இம்மாபெரும் பணியில் எம்மை ஈடுபடுத்திக் கொள்ள அல்லது முன்னோடிகளாக இருக்கவிரும்பும் நாம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பது மிகமிகப் பிரதானமானது.

1, எளிமையான புழக்கம்.

2, புகழார்வம் பதவி மோகமற்ற தன்மை.

3, சமூகத்தோடு இயலுமானவரை எம்மை ஈடுபடுத்தல்.

www.tamilarangam.net

4. விடுதலை எனும் நோக்கிற்கே எல்லாவித செயற்பாடுகளும் வந்தடையுமாறு எம்மை ஆக்கமுயலுதல்.

5. பெரிதாகச் செய்துவிட்டதாக இறுமாப்புக் கொள்ளாதிருத்தல்

6. அயலில் உள்ளவர் மனம் நோகும் வண்ணம் கேலி, கிண்டல் செய்து மற்றவர்களின் மனவெறுப்புக்கு ஆளாகாதிருத்தல் போன்ற சராசரி மனிதப்பண்புகள் நிச்சயமாக நிறைந்திருக்கவேண்டும்.... அப்படி இல்லாவிடின் கஷ்டப்பட்டாவது முயற்சிக்க வேண்டும்.

ஏனெனில் ஒரு சமூக முன்னோடி என்பவள் சமூக நோயைக் குணப்படுத்தும் மருத்துவப் பெண். குஷ்டரோகத்தை குணப்படுத்த உதவும் மருத்துவப்பணியாளர் தான்கொண்டுள்ள பாதுகாப்புக்களையும் மீறி அது தன்னையும் தொற்றிவிடும் என எண்ணினாலும் தகுதியற்றவர். இதேபோல நான் நோயுற்றவர்களுடன் பேசவே மாட்டேன் குணமடைந்தவர்களுடன் மட்டுமே பேசுவேன் என்று அடம்பிடித்தால் அந்த நபர் வைத்தியரே இல்லை.

இது போலவே பொட்டையும், பூவையும் போடுகின்றவர்களோடு, நான் பேசவே மாட்டேன் என முகத்தை திருப்பி வைத்துக்கொண்டிருந்து நாம் எதையுமே சாதிக்கமுடியாது. யார் இவைகளை செய்கிறார்களோ அவர்களை நண்பர்களாக்கி அவர்களோடு அன்பாகப் பழகி அதன்பின் அவர்களுக்கு எடுத்துச் சொல்வதால் சிலவேளை நன்மை கிட்டலாம்.

அதோடு இன்று நாம் முதன்மை கொடுக்கவேண்டிய மிகப்பெரிய பாதிப்புகளுக்கு சமமான எடைகொண்டவை தானா இத்தகைய பாதிப்புக்கள் அல்லது இவைதான் பிரதானமாக என்ற தெளிவும் நாம் பெற்றே ஆகவேண்டும்.

உதாரணமாக ஒரு நடைமுறை அதாவது என்னிடம் கடவுற்பற்று இல்லை. ஆனால் பலர் சமூகத்தில் ஒரு வயோதிபர் எனக்கு விபூதியைத் தருகிறார். அவருக்கு என்னைப்பற்றிய விபரம் எதுவும் தெரியாது. இங்கே எனது

www.tamilarangam.net

நடவடிக்கை என்ன?

அ. வாங்கி பூசலாம், ஆ. வாங்கி அதனைப் பூசாமல் வெளியே சென்று எங்காவது கொட்டிவிடலாம். இ. வாங்க மறுத்து மேலும் வற்புறுத்தினால் மூஞ்சியில் வீசிவிட்டும் வரலாம்.

இந்த மூன்றிலும் முதல் இரண்டு நடவடிக்கைகளிலுமுள்ள மனிதநேயமும் அந்த நடவடிக்கைகள் மூலம் சம்பாதித்த சிநேகமும் மூன்றாவது நடைமுறையில் அறவே அற்றுக்கிடக்கின்றன. எமதுள்ளத்தில் உண்மையான உறுதிப்பாடிருந்தால் எம்மை நாம் முந்திரிக்கொட்டைத்தனமாக பிரபல்யப்படுத்த வேண்டி ஏற்படாது. நாங்கள் முற்போக்கான சிந்தனையாளர்கள் என எமக்கு நாமே முத்திரை பதிக்காமல் மக்களை மதித்து நடப்பதினூடாகவே மக்களை வென்றெடுக்கமுடியும்.

அதாவது தொழிலாளி.... என்று தலையங்கம் தீட்டித்தான் தொழிலாளி பற்றி எழுதவேண்டுமென்றில்லை. "முதலாளி" என்ற தலைப்பின் கீழும் தொழிலாளிக்காக எழுதலாம்.

இவ்வாறான நடைமுறைச் சீரமைப்புக்கள், மிக விரைவாக எம்மை வந்தடைய ஆவன செய்யவேண்டும்.

அத்துடன் இதுவரை இருந்தது போல் பொறுமையாகவே இருந்துவிடாமல் இக்கேள்விக் கட்டுரை தொடர்பாக எந்த அளவுக்கு விமர்சனங்களும்- சர்ச்சைகளும் உருவாகுமோ அதனையே ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

(இக்கட்டுரை லூப்பெற்றாலில் நடைபெற்ற மூன்றாவது பெண்கள் சந்திப்பில் கட்டுரையாளரால் வாசிக்கப்பட்டது.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடை காண்பீர்.

வான் நிலை மாறுமோ – புது
வடிவங்கள் தோன்றுமோ !
உலகப் பரப்பே கலகப் பயமாம்
போர் நிலை மாறும் ஓர் நிலை வாராதோ ?
யார் நிலை அறிந்து எவரெல்லாம்
அழுகின்றார் .
"ஜார்" நிலையறியாத உலக
வரலாறு என்ன ?
சோறும் கறியும் கிடைக்கா எமக்கு
மோரும் தயிரும் ஊறுகாயும்
எப்படி ?
" மாறும் சமூகம் " மாறியே தீரணும்.
" பாண் காணாது பரிதவித்தோர்க்கு
கேக் இருக்கென்று " சொன்னாள்
இராணி 1789 இல்.
பிரஞ்சுப் புரட்சிக்கும் இது
ஒரு காரணி.
இருநூறு ஆண்டுகள் தாண்டி
இன்று
கிழக்கயிரோப்பாவெங்கும் புரட்சியாம்
1989தில்
எங்கள் நாட்டிலே இது வாராத
சங்கதி என்ன ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தத்துவ வாதிகள் சத்குருவாரோ ?
மோன நிலையின் ஞானிகளாரோ ?
மோப்பம் பிடிக்கும் நாமிகளாரோ ?
வேப்பம் பழத்தை தின்ற நிலையினில்
காக்கை வன்னியன் கதைகளோசி
சொன்னவர் கடைசியில்
உடை களைந்தொரு நடை
நடந்திட்டார்.
உண்மை அதற்கு
விடை காண்பீர் நீர்
விட்டுவிடாதீர்
காகமும் வடையும் கதை
படித்தீரா ?
நரி வாயில் வடை
எப்படி வந்தது ?

— சிவப்பன் —

## வாசகர் கடிதம் .......

இதழ் 26 ல் வெளியான ஜன்னல் சிறுகதை நன்றாக இருந்தது. பாலியின் விற்பனை, சிவப்பனின் பிரசவம், கோசலியா சொர்ணலிங்கத்தின் ஒரு சத்தியம், கவிதைகள் படிக்கக் கூடியதாகவுள்ளன. சித்திராவின் தொடர்கதை சுமாராகப் போகும் அடுத்த தொடர் எப்போது வரும் என எதிர் பார்க்க வைக்கிறது.

— சாந்தகுமாரி பாலச்சந்திரன் —
வைகர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஜேர்மெனியில் தமிழ் நூலகம்

Stadt Witten
Stadtbücherei
Tamilische Bücher



விற்றன் பொதுநூல்நிலையத் தமிழ்ப்பிரிவில் சுமார் 1,000 தமிழ் நூல்கள் உங்கள் வாசிப்புக்காக உள்ளன.

இலங்கை, இந்திய எழுத்தாளர்களின் படைப்புகளுடன், புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் படைப்புகளும்.

சமூக நாவல்கள், மர்ம நாவல்கள், குறுநாவல்கள், சரித்திர நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், மருத்துவம், மதம், கல்வி, சமையல், விளையாட்டு, நாடகங்கள், சிறுவர்நூல்கள், அரசியலும், சமூகமும்...... இன்னும் பல தரப்பட்ட விடயங்கள்.

தமிழ்ப் பிரிவிலுள்ள நூல்களை நீங்கள் இரவலாகப் பெறுவதற்குரிய தகவல்களையும், தமிழ் நூல்களின் விபரங்களையும் பெற்றுக்கொள்ள கீழுள்ள முகவரியுடன் தமிழில் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.

Stadtbücherei Witten
Tamil Sektion
Ruhrstr. 48

581o Witten

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சித்திரா=பெண்

பார்த்திபன்

13.

சிவலிங்கமும், சுபேசுவும் சேர்ந்து கதிரைகளைத் தூக்கிக்கொண்டுபோய் அக்கம் பக்கம் வீடுகளில் ஒப்படைத்துக்கொண்டிருந்தார்கள். தவமணி பாத்திரங்களின் அடியில் இடப்பட்ட குறிகளைப் பார்த்து யார் யாருடையவையென்று பிரித்துக்கொண்டிருந்தாள்.

அம்மம்மாவும், வயதுபோன மாமி ஒருத்தியும் பாக்குமென்றபடி தங்கள் வயதுக் கதைகளில் மூழ்கியிருந்தார்கள். சிவலிங்கத்தினதும், தவமணியினதும் மிக நெருங்கிய உறவினர்கள் வீடு முழுவதையும் முற்றாக ஆக்கிரமித்திருந்தார்கள்.

சித்திரா வெளியே மாமியின் பிள்ளைகளுடன் விளையாட்டில் இருந்தாள். "எப்ப நீங்க போவீங்க?" திடீரென ஞாபகம் வந்து கேட்டாள்.

"இண்டைக்குப் பின்னேரம் போறவம்" என்றான் முரளி. "நாளைக்குப் பள்ளிக்கூடம்"

"நீயும் போறுவியா?"

"நானும் போறுவன்" சாந்தி ஏதோ பலகாரத்தைக் கடித்துக்கொண்டு சொன்னாள்.

அவர்கள் போகப் போகிறார்கள் என்பது சித்திராவைத் துக்கமாக்கியது. முந்தாநாள் நடந்த அக்காவின் சாமத்தியச் சடங்கும் வீடு முழுக்க உறவினர்கள் நிரம்பியிருந்து அம்மாளடித்ததும் அவளுக்குப் பிரமிப்பையும், சந்தோசத்தையும் தந்திருந்தது. 'இவ்வளோ பேரும் இவ்வளோ நாளா எங்கயிருந்தவை?'

"நீ எங்கடை வீட்டை வாவன்" முரளி அன்பாய் அழைப்பு விடுத்தான். ஜன்னலில் அம்மாவின் முகம் தெரிய "சித்திராவை எங்கடை வீட்டுக்கு கூட்டிக்கொண்டு போவமா?" கேட்டான்.

"இப்பவே உவ்வளவு அன்பு வந்திட்டுது"

"நல்ல மச்சானும், மச்சாளும்"

"கெதியிலயே கட்டிவைக்கவேண்டி வரப்போகுது"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முரளியின் அம்மாவும், அருகில் நின்றவர்களும் தங்களுக்,ள் க தைத்துப் பெரிதாகச் சிரித்துக்கொண்டார்கள்.

தங்களுக்குப் பதில் தராமல் அவர்களே சிரித்துக்கொள்வது முரளிக்கும், சித்திராவுக்கும் குழப்பமாயிருந்தது. அவர்கள் மறுபடி தங் கள் ட்ரெயினில் ஏறி பிரயாணம் செய்தார்கள். சாந்தி இன்னும் எதை யோ வைத்துக் கடித்துக்கொண்டிருந்தாள். சாப்பாட்டு ராணி.

சிவலிங்கமும், சபேசனும் இன்னும் இரவல் தளபாடங்களை ஒப்படைத்து முடியவில்லை. வியர்க்க, வியர்க்க இங்குமங்குமாய்ப்போய்க் கொண்டிருந்தார்கள்.

மாதவி வெளியே வரவேயில்லை. அவள் பாயில் இருந்த நாள் தொடக்கம் அதை அறையில்தான். ஏகமாய் வெட்கப்பட்டுக்கொ ண்டிருந்தாள். அடுத்தநாளே வந்துவிட்ட சொந்தக்காரர்களில் பெண்பா லார் அவளைச் சூழவே எந்நேரமும் இருந்தார்கள். ஏதேதோ கணக்கு போட்டுக் கதைத்தார்கள்.

தவமணி பாத்திரங்களைப் பிரித்து முடித்துவிட்டாள். இனி அவற்றை உரியவர்களிடம் ஒப்படைக்கவேண்டிய பொறுப்பு சிவலிங்கம், சபேசன் பணி. குசினியை விட்டு வந்து விறுந்தையில் சுவர்க் கடிகாரம் பார்த்தாள். விரைவில் பன்னிரண்டாகிவிட ஆயத்தமாயிருந்தது. மத்தியான சமையல். வீடு பூரா நிரம்பியிருப்பவர்களுக்குச் சமைத்துப்போட வேண் டும். சடங்கில் மிஞ்சியவை எல்லாம் முடிந்துவிட்டன. புதிதாக ஆக்கவேண் டும். யாரும் கரிசனையாக சமையலறைக்கு வருவதாயில்லை.

மூத்த மாமி இன்னும் அம்மாவுடன் அளவளாவிக் கொண்டிரு ந்தாள். வாயில் போட்டுக் குதப்பிக்கொண்டிருந்த பாக்கு, வெத்திலைக் கொம்பினேசன் அவர்களை எவ்விதத்திலும் இடையூறு செய்யவில்லை.

மாதவியின் அறை கலகலத்துக்கொண்டிருந்தது. வழங்கப்பட்ட அன்பளிப்புகளை யாரோ விபரித்துக்கொண்டிருக்க, இன்னொருத்தி அவ ற்றை விமர்சித்துக்கொண்டிருந்தாள்.

முன்வாசல் அறையிலும் ஏனைய மாமிகள், அன்ரிகள், சித்திக ள், வேறும் சொந்தங்கள்.

இன்றும் தானே சமையல். இதில் மாற்றம் வராதென்பதில் மாற்றமில்லை என்றுணர்ந்து தவமணி மறுபடி சமையல் அறையினுள் புகுந் தாள். இத்தனை பேருக்கும் வெட்டவேண்டிய மரக்கறிகள், மீன்கள், இத் யாதிகளைப் பார்த்தபோது மலைப்பாக இருந்தது.

வெளியே—

"உன்ரை வீட்டுக்கும் கன பிரண்ட்ஸ் வருவினமே?" சித்திரா வின் பெட்டியிலிருந்தபடி கேட்டாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஓ.எங்கட வீட்டுக்குப் பின்னுக்குப் பெரிய வளவொண்டிருக்கு.நாங்கள் புட்போல் விளையாடுவோம்.பிள்ளையார் பந்து விளையாடுவோம்.பெரியாக்களும் வருவினம்.அவையோட யாடு விளையாடுவம்"எஞ்சின் பகுதியிலிருந்த முரளி ஆர்வமாக விபரித்தான்.

சித்திரா தனது சிநேகிதிகளைப் பற்றியும், பள்ளிக்கூடத்தை பற்றியும், விழாக்களைப் பற்றியும் சொன்னாள். அதில் அவன் அதிகம் ஆர்வம் காட்டவில்லை. முரளியும், சாந்தாவும் பிரிவதற்குள் அவர்களுடன் விளையாடித் தீர்த்துவிடவேண்டும் அவர்களுடனேயே சித்திரா முழு நேரமும் இருந்தாள். இந்த நாட்களில் யாரும் அவளைப் படிக்கச் சொல்லியோ, வீட்டு வேலை செய்யச் சொல்லியோ கட்டளையிடாததால் அவள் மிகவும் சந்தோசமாயிருந்தாள்.

அன்று பின்னேரமும், மறுநாள் காலையிலும் காரியம், பல்லிவமாக எல்லோரும் அங்கிருந்து சென்றுவிட்டனர். வீடு மறுபடி வெறிச்சோடி வழமை நிலைமைக்குத் திரும்பியது. தவமணி நிம்மதிப் பெருமூச்சுவிட, சித்திராவுக்கு முரளியும், சாந்தாவும் இல்லாதது கவலையளித்தது.

மீண்டும் பள்ளிக்கூடம். யோகா ரீச்சர். கணக்கு. சுகாதாரம். சங்கீதம். மாலை கொஞ்சம் விளையாட்டு. பின்பு எரிச்சலூட்டும் வீட்டு வேலைகள். 'அக்கா இன்னுருக்கா சாமத்தியப்பட்டா என்ன?'

ஒரு ஞாயிறு. மாதவியின் பூப்புனித நீராட்டு விழாவுக்கு ஓடியாடி வேலை செய்தவர்களுக்கு விருந்து. சிவலிங்கம் பங்கு ஆடு வேண்டியிருந்தார்.

பக்கத்துவீட்டு ரஞ்சனும், மாணிக்கவாசகமும், அவரது புதல்வனும், வேறு இரு ஆண்களும் வந்திருந்தனர். முன் கூடத்தில் எல்லோருமிருந்து அரட்டையடித்துக் கொண்டிருக்க, சமையலறையில் தவமணி வெந்துகொண்டிருந்தாள். அம்மம்மா தன்னாலியன்ற ஒத்தாசை.

"இந்தமுறை லெக்சனில யூ.என்.பி.தான் வரும்போலகிடக்கு"

"எல்லாத்துக்கும் கியூவில நிப்பாட்டி வைச்சதுக்கதண்டியே சிறிமா தோக்கப்போறா"

"சிறிமா இருந்ததாத்தான் தோட்டக்காறருக்கு நல்ல வருமானம்"

"ஜே.ஆர் வந்தா பொறின் சாமான்கள் கிடைக்கும்"

"சாப்பிடலாம்" தவமணி வந்து அழைத்ததும் எல்லோரும் தமது அரசியல் அவதானத்தை தற்காலிகமாக ஒத்திவைத்துவிட்டு சாப்பாட்டு மேசையில் கூடினர்கள். சுவையான மணத்துடன் ஆட்டிறைச்சி, பூப்போல சோறு, தக்காளிச் சம்பல், ஆட்டெலும்பில் ரசம், தக்காளிச் சொதி..... அம்மம்மாவும், தவமணியும் பரிமாறினர்கள். அவர்கள் சாப்பிட்டு முடிந்து, தவமணி ஆரம்பித்தபோது ஆட்டுக்கறி இல்லை. முடிந்துவிட்டிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிறகும் இருந்து அலசிவிட்டு எல்லோரும் கலைந்துபோனார்கள். ரஞ்சன் தான்கொண்டு வந்த அன்பளிப்புப் பொருளை கொடுத்து மாதவிக்கும், சித்திராவுக்கும் கொஞ்சிவிட்டுப் போனான். அவனுக்கு அவர்கள் மூவரிடம் நல்ல அன்பு. காசைக் கொடுத்தால் சைக்கிளில் போகும்போது அவர்கள் வீட்டுக்கு சாமான்கள் வாங்கிக் கொடுப்பான். சிவலிங்கம் வெளியூர் போயிருக்கையில் அவர்களில் யாருக்காவது வருத்தம், துன்பம் என்று அவதிப்பட்டால் அவனே அவர்களை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு டொக்ரிடம் போவான். இல்லையென்றால் டொக்டரை இங்கே கூட்டிவருவான். ரஞ்சன் மாமா என்று இவர்களும் அவனில் நல்ல பிரியம்.

ரஞ்சனின் தலைமறைந்ததும்தான் தாமதம், தவமணி விடுவிடுவென்று வந்து மாதவியின் தலையில் பலமாகக் குட்டினாள். "உனக்கெத்தினை தரம் சொன்னனான் உப்பிடி பெடியளுக்குக் கிட்டப் போய் பழக வேண்டாமெண்டு. பார் அவன் கொஞ்சிப் போட்டுப் போறான்"

அம்மாவின் செய்கையால் மாதவி மட்டுமல்ல , அங்கு நின்ற சித்திராவும் அதிர்ச்சியடைந்தாள். இத்தனை நாளாய் ரஞ்சன் மாமா இனிப்பு, ரொபி தரும்போதும், தங்களைத் தூக்கி வைத்திருக்கும்போதும், அன்பாய் முத்தமிடும்போதும் அலட்டிக்கொள்ளாமல் பார்த்துக்கொண்டிருக்கும் அம்மாவுக்கு இப்போது என்ன நடந்தது?!

"ஏன்? ரஞ்சன் மாமாதானே?"

"அப்பிடித்தான். வாய் காட்டாமச் சொல்வழியைக்கேள். இன்னும் நீ சின்னப்பிள்ளையில்லை" கோபமாகவே சொல்லிப்போட்டுப் போனாள் தவமணி.

"பொம்பிளைப்பிள்ளையள் ஆம்பிளையளோட முட்டிப் பழக கூடாது. ஆம்பிளையள் கிட்ட வந்தால் நாங்கள்தான் கவனமா விலத்திப் போக வேணும்" என்று அம்மம்மா மேலதிகக் குறிப்புகள் சொன்னாள்.

சித்திராவும், மாதவியும் ஒருவரையொருவர் புரியாமல் பார்த்தார்கள்.

(தொடரும்)

■ பின்பற்றத்தக்க நல்வாழ்வுக் கோட்பாடுகளில் எதை விரும்புகிறீர்கள்? எதை வெறுக்கிறீர்கள்? எந்த ஒரு நல்ல கொள்கையையுமே நீங்கள் விரும்பவில்லை என்றால்... அப்புறம் உங்கள் இஷ்டம். நீங்கள் எங்கேயும் எதையும் எதிர்பார்க்காதீர்கள்.

—அகஸ்டஸ் ஆலிப் ஹிப்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"ஏன் என்று கேட்க நாங்கள் யார்!
நாங்கள் உழைக்கவும் சாகவும் பிறந்தவர்கள்."

(ஒரு மலையகத் தொழிலாளியின்
கல்லறையில் எழுதப்பட்ட வரிகள்)



ஒரு கூடைக் கொழுந்து

N. S. M. ராமையா அவர்களின் நினைவாக...

# - ஓர் ஒன்றுகூடல் -

26. 1. 1991 சனி பி.ப. 17.00 மணி

**Mehringhof (Versammlungsraum)**
**Gneisenaustr. 2a**
**1000 Berlin 61**
**(U-Bhf. Mehringdamm)**

<u>நிகழ்ச்சிகள்:</u>

- கருத்தரங்கு: "நமக்கிடையான முரண்பாடுகளும் எமது நகர்வுகளும்..."
- கவிதா நிகழ்வு: இரா. ரஜீன்குமார்
- அறிமுக அரங்கு: ம. கௌரிதாசின் "புதிய விடியல்கள்"
  (அறிமுகமும் விமர்சனமும்)
- இசை நிகழ்ச்சி: போர் எதிர்ப்பு இசைப்பாடல்கள் - பாலியல் -

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்!

**Interkultureller Treffpunkt "Grenzenlos"**
(சர்வதேச கலாச்சார சந்திப்பு நிலையம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# வாசகர் கடிதம்.

யன்னல் கம்பிகளிற்குள்ளால் ஓர் பெண்ணைப் பார்க்கும் ஆணின் பரிதாபப் பார்வை யன்னல் - சிறுகதை.

" அத்தானையும் ஒருத்தி காதலிச்சாளாம்
இவர் தன்ரை தங்கச்சிமார் 'இருக்க' நான் எப்படி
கலியாணம் செய்வது என்று சொல்லி மறுத்துவிட்டார்..."

சிறுகதையின் இடைநடுவில் வரும் இந்த அத்திவாரத்திலிருந்து கதையை யாரும் பார்க்கக்கூடாது. ஏனெனில் கலியாணம், காதல் எல்லாம் ஆணின் விருப்பங்குட்பட்டிருப்பதை கருவாகக்கொண்டு கதை சொல்லப்படவில்லை. கதையின் கருவானது 'வயது கழிந்து கலியாணம் செய்தால் பெண்களுக்கு பிள்ளை இல்லாமல் போகும்' இவ்வளவுதான்.

பிள்ளை பெறும் யந்திரமல்ல பெண் என்று எந்தப்பெண்ணைக் கேட்டாலும் சொல்லுவார்கள்.

' நேரத்தோடை கலியாணம் செய்துபோடுங்கோ
இல்லையெண்டால் உங்களுக்குப் பிள்ளை இல்லாமல் போகும்' என்று யாரும் உங்களைப்பார்த்துக் கேட்டால் கேட்டவர்மேல் எப்படி உங்களுக்குப் பரிதாப உணர்வு வருகிறதோ அப்படியே ஒரு சராசரி ஆணின் பார்வையில் இருந்து பெண்ணைப் பார்க்கும் 'பரிதாபம்' இக்கதையிலும் தெரிகிறது.

கலியாணம் செய்யாமல் நாற்பது வயது வந்தாலும் ஒரு பெண் கற்போடுதான் இருக்கவேண்டும் என்று கதை சொல்பவர் விரும்புகிறார் என்று எனக்குத் தெரியவில்லை.

நிமலன்.
டோர்ட்முண்ட்.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கண் திறவாய்

பெண்ணே
உன்
வீட்டு முற்றத்தில்
என்று வரும் சூரியன்

குசினியை விட்டு
வெளியே வராத
உன் பாட்டிமார்களும்

கிடுகு வேலிக்குள்
அதிகம்
முகம் மறைத்து வாழ்ந்த
உங்கள் தாய்மார்களும்

வீடும் பள்ளிக்கூடமுமாய்
திசை வைத்து
உதைக்கப்பட்ட பந்துபோல்
இடம் மாறிய நீயும்

அடுக்களையும் பள்ளியறையுமா
நீ வாழுமிடம்?

திரையிட்டு
முகம் மறைக்கும் துளுக்களும்
ஊசி நூல் போட்டு
யோனி தைக்கும் ஆபிரிக்கர்களும்
தாலி விலங்கு மாட்டி
உயிரோடு எரித்த இந்தியர்களும்

இவர்கள்
நெஞ்சுக்கு முன்னால்
உன் குனிந்த தலை நிமிர
உன் காலில் நீ நிற்கும்
உழைப்பையும் கையிலெடு
ஒன்று கூடிச் சாடு ....
உலகம் விடிய....

சத்தியன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நமது குரல்



இச் சஞ்சிகை ஜேர்மன் பெண்கள் வட்டம் அமைப்பின் சார்பில் மூன்றாம் உலக நாடுகள் தகவல் நிலையத்தினரின் உதவியுடன் மூன்று மாதங்களுக்கொரு முறை இலவசமாக வெளியிடப்படுகிறது.

சஞ்சிகையை தபால் மூலம் பெற்றுக் கொள்ள விரும்புவோர் 1.00 மார்க் பெறுமதியான முத்திரைகளை அனுப்பி வைக்கவும்.

தொடர்புகளுக்கு.

FRAUEN KREIS,
INFORMATION ZENTRUM DRITTE WELT,
OVERWEG STR 31,
4690 HERNE 1.

TELEFON: 02323/496970-74.